**_அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை_**

Ang Mo Kio Tamil Methodist Church

*Advent Sunday / 30th November, 2025*

**_கிறிஸ்துமஸ் கீதஆராதனை / Christmas Carol Service_**

✝ **_ஆராதனைக்கு அழைப்பு_** — **_திரு. டேனி ஜாய்சன்._**
Call to Worship — Mr. Danie Joyson

**_இறைவணக்கப் பாடல்_** — **_பாடகர் குழு_**
Introit — Choir

**_மேசியா ஏசு நாயனார்_**

**_மேசியா ஏசு நாயனார் எமை_**
**_மீட்கவே நரனாயினார் (2)_**

*1. நேசமாய் இந்தக் காசினியோரின்*
*நிந்தை அனைத்தும் போக்கவே*
*மாசிலான் ஒரு நீசன் போலவே (2)*
*வந்தார் எம் கதி நோக்கவே* - **_மேசியா ஏசு_**

*2. தந்தையின் சுதன் மாந்தர் பாதகம்*
*சகலமும் அற வேண்டியே*
*விந்தையாய்க் குடில் மீதில் வந்தனர் (2)*
*விண்ணுலகமும் தாண்டியே* - **_மேசியா ஏசு_**

*3. தொண்டர் வாழவும் அண்டரின் குழாம்*
*தோத்திரம் மிகப் பாடவும்*
*அண்டு பாவிகள் விண்ணடையும் (2)*
*ஆயர் தேடிக் கொண்டாடவும்* - **_மேசியா ஏசு_**

*4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே*
*திருச்சுதன் மனுவேலனார்*
*பாவிகள் எங்கள் பாவம் மாறவே (2)*
*பார்த்திபன் தேவ பாலனாய்* - **_மேசியா ஏசு_**

**_ஜெபம்_** — **_திரு. டேனி ஜாய்சன்._**
Prayer — Mr. Danie Joyson

**_முதலாம் ஞாயிறு : Lighting of Advent 1st Candle_**

**_நம்பிக்கை / Hope_**

**_ரோமர் 15:13_**

**_13. பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக._**

**_ஒரு ஊதா நிறமெழுகுவர்த்தியை கொழுத்தவும்_** — **_மறைதிரு. விஜய் ஜோஸப்_**
**_(Light up one purple candle)_** — Rev. Vijay Joseph

**_அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:_** — **_திரு. டேனி ஜாய்சன்._**
Mr. Danie Joyson

**இன்றைக்கு நம்பிக்கையின் மெழுகுவர்த்தியை கொழுத்துகிறோம். இது ஆண்டவர் நமக்கு கொடுத்த வாக்குதத்தங்களை நினைவுகூறட்டும். அவரே நம்முடைய நம்பிக்கை, அவரே நம்முடைய மீட்பர், அவரே நம்முடைய ரட்சகர்.**

**ஜெபம்: பிதாவே, இந்த வருகையின் காலங்களிலே, நாங்கள் உம்முடைய வாக்குதத்தங்களையும் அவைகளின் நிறைவேறுதலையும் எண்ணிபார்க்க கிருபைசெய்யும். எங்கள் வாழ்க்கையில் அவருடைய வருகைக்காக எங்களை நாங்கள் ஆயத்தப்படுத்த உதவி புரியும். இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்**

✝ **தொடக்கப் பாமாலை** — **_சபையார் இணைந்து_**
Opening Hymn — Congregation

**_இம்மானுவேலே வாரும்_**

*1. இம்மானுவேலே வாரும், வாருமே,*
*மெய் இஸ்ரவேலைச் சிறைமீளுமே,*
*மா தெய்வ மைந்தன் தோன்றும் வரைக்கும்*
*உம் ஜனம் பாரில் ஏங்கித் தவிக்கும்*

**_மகிழ்! மகிழ்! சீயோனின் சபையே,_**
**_இம்மானுவேலின் நாள் சமீபமே._**

*2. ஈசாயின் வேர்த் துளிரே, வாருமே,*
*பிசாசின் வல்ல கோஷ்டம் நீக்குமே;*
*பாதாள ஆழம் நின்று ரட்சியும்*
*வெம் சாவின்மேல் பெருவெற்றி அளியும்* - **_மகிழ்_**

*3. அருணோதயமே, ஆ, வாருமே,*
*வந்தெங்கள் நெஞ்சை ஆற்றித் தேற்றுமே;*
*மந்தார ராவின் மேகம் நீக்கிடும்,*

*இருண்ட சாவின் நிழல் ஓட்டிடும் -* ***மகிழ்***

*4. தாவீதின் திறவுகோலே, வாருமே,*
*விண் வாசலைத் திறந்து தாருமே;*
*ஒடுக்கமாம் நல் வழி காத்திடும்,*
*விசாலமாம் துர்ப் பாதை தூர்த்திடும் -* ***மகிழ்***

| | |
|---|---|
| ***கிறிஸ்துமஸ் கீத படைப்பு*** | ***ஞாயிறு பள்ளி*** |
| Carol Rendition | Sunday School |
| ***கிறிஸ்துமஸ் கீத படைப்பு - 1*** | ***பாடகர் குழு*** |
| Carol Rendition | Choir |

## Christmas kumbaya

See that babe in a man-ger bed, Hal-le-lu, hal-le-lu.
Gath-er 'round, see him rest his head, Hal-le-lu, hal-le-lu.
Christ-mas joy in a man-ger bed, Hal-le-lu, hal-le-lu
See the lit-tle ba-by, Hal-le-lu.

Some-one's sleep-ing, Lord kum ba ya,
Hal-le-lu
Some-one's sleep-ing, Lord kum ba ya
Hal-le-lu, Hal-le-lu
Some-one's slee-ping, Lord kum ba ya
Hal-le-lu, Oh, See the little ba-by, kum ba ya

M-to-to m-cha-nga do-ga sa na
Fu-ra-hi, ki-ko-ra, He is born!
M-to-to m-cha-nga do-ga sa-na. Oh,
see the lit-tle ba-by, kum ba ya.

Some-one's
See that babe in a manger bed,
Sing – ing, Lord, Kum bay a
Shout the news as the angels said,
Some – One's Sing – ing, Lord, Kum ba ya,
Chris-tmas joy in a man-ger bed,
Some – One's Sing – ing, Lord, Kum ba ya,
Oh
See the lit-tle ba-by, Kum ba ya.

Some-one's sleep-ing, Lord
Some-one's sleep-ing, Lord
Fu - ra – hi, Ki Ko-ra Mm.

| | |
|---|---|
| ✝ ***திருமறைப் பாடம் – 1*** | ***திருமதி. ஜூலியட் நெல்சன்*** |
| Scripture Reading - 1 | Mrs. Juliet Nelson |
| ***ஆதியாகமம் 3 : 8 - 15*** | |
| Genesis 3 : 8 - 15 | |
| ***கிறிஸ்துமஸ் கீத படைப்பு - 2*** | ***பாடகர் குழு*** |
| Carol Rendition | Choir |

## *ஏசாயா தீர்க்கன்*

***ஏசாயா தீர்க்கன் அன்றொரு நாள் தரிசனம் கண்டான்***
***தேவ மைந்தன் கன்னி மரியின் மடியில் தோன்றுவார் - என்று***

*1. கடும் குளிரில் மேய்ப்பர் மந்தை காத்து நிற்கையில்*
*தேவ தூதர் வானில் தோன்றி வாழ்த்து கூறினார்*
*எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷம் தரும்*
*நற்செய்தியை கூற இங்கு வந்தேன் என்றாரே -* ***ஏசாயா***

*2. தாவீதின் குமாரன் இயேசு பெத்லஹேமிலே*
*மாட்டுத் தொழுவில் ஏழ்மையாக அவதரித்தாரே*
*கர்த்தராகிய கிறிஸ்து உலக ரட்சகர்*
*பாலனாக உன்னில் தோன்ற இடம் தருவாயா -* ***ஏசாயா***

*3. பாவத்திலே மாண்டு போகும் மண்ணின் மைந்தர்க்காய்*
*விண்ணின் வேந்தன் தன்னை இன்று உலகில் தந்தாரே*
*சிலுவை மரத்திலே மரித்து ஜீவன் ஈந்தாரே*
*உயிர்த்தெழுந்த இயேசுவை நீ இன்று ஏற்றுக்கொள் - ஏசாயா*

| | |
|---|---|
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** | |
| Thanksgiving & Pastoral Prayer | |
| ***கர்த்தருடைய ஜெபம்*** | ***சபையார் இணைந்து*** |
| Lord's Prayer | Congregation |
| ✝ ***கணிக்கை பாடல்*** | ***சபையார் இணைந்து*** |
| Offertory Song | Congregation |

## *சாலேமின் ராசா*

*1. சாலேமின் ராசா, சங்கையின் ராசா, ஸ்வாமி வாருமேன், ஸ்வாமி, வாருமேன், - இந்தத்*
*தாரணிமீதினில் ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன்.*

*2. சீக்கிரம்வருவோமென்றுரைத்துப்போன செல்வக்குமாரனே; - இந்தச்*
*சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்திகேளீரோ? - சாலேமின்*

*3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்துபார்த்துக் கண்பூத்துப் போகுதே; - நீர்*
*எங்கட்கு நல்கிய வாக்குத்தத்தம்*
*நிறைவேறலாகுதே. –* **சாலேமின்**

*4. நங்கை எருசலேம்பட்டினம் உம்மை நாடித்தேடுதே - இந்த*
*நானிலத்திலுள்ள யூதஜாதியும்மை தேடிவாடுதே* **- சாலேமின்**

*5. சாட்சியாகச் சுபவிசேஷம் தாரணிமேவுதே; உந்தஞ்*
*சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே. –* **சாலேமின்**

✝ **பூலோகத்தாரே யாவரும்** **சபையார் இணைந்து**
Doxology Congregation

**கிறிஸ்துமஸ் கீத படைப்பு** *-3* **பாடகர் குழு**
Carol Rendition Choir

**<u>பனி காலம் ஓர் நள்ளிரவில்</u>**

*1. பனி காலம் ஓர் நள்ளிரவில்*
*பெத்லகேமில் ஓர் சத்திரத்தில்*
*மாட்டுக் கொட்டிலின் முன்னனையில்*
*பிறந்தார் ஓர் பாலகன்*

**கன்னி மரியின் மடியிலே**
**கந்தை துணிகள் நடுவிலே**
**பிறந்த பாலனை சந்திப்போமா**
**அவர் பொற் பாதம் பணிவோமா**

*2. பெத்லகேம் அருகில் வயல்வெளி*
*மேய்ப்பர் காத்தனர் மந்தைகளை*
*தூதன் கூறினான் நற்செய்தியை*
*பிறந்தார் ஓர் பாலகன்* **- கன்னி மரியின்**

*3. வானத்தில் ஓர் நட்சத்திரம்*
*கண்டனர் மூன்று சாஸ்திரிகள்*
*அறிந்தார் ஏரோது உண்மைதனை*
*பிறந்தார் ஓர் பாலகன்* **- கன்னி மரியின்**

*4. பாலகனின் பிறந்த நாள்*
*கேட்போம் அந்நற்செய்திதனை*
*திறப்போம் இதய கதவினை*
*பிறப்பார் ஓர் பாலகன்* **- கன்னி மரியின்**

✝ **திருமறைப் பாடம்** *– 2* **திரு. டேனியல் மோசஸ்**
Scripture Reading - 2 Mr. Daniel Moses

**யோவான்** ***1 : 1 - 5, 11 - 14***
John 1 : 1 - 5, 11 - 14

**கிறிஸ்துமஸ் கீத படைப்பு** *- 4* **பாடகர் குழு**
Carol Rendition Choir

**<u>What Child is this</u>**

What Child is this Who laid to rest
On Mary's lap is sleeping?
Whom angels greet with anthems sweet
While shepherds watch are keeping?

This, this is Christ the King
Whom shepherds guard and angels sing
Haste, haste, to bring Him laud
The Babe, the Son of Mary

Why lies He in such mean estate
Where ox and lamb are feeding?
Good Christian, fear, for sinners here
The silent Word is pleading

Nails, spear shall pierce Him through
The cross be borne for me, for you
Hail, hail the Word made flesh
The Babe, the Son of Mary

So bring Him incense, gold and myrrh
Come peasant, king to own Him
The King of kings salvation brings
Let loving hearts enthrone Him

Raise, raise a song on high
The virgin sings her lullaby
Joy, joy for Christ is born
The Babe, the Son of Mary

Raise, raise a song on high
The virgin sings her lullaby
Joy, joy for Christ is born
The Babe, the Son of Mary

**கிறிஸ்துமஸ் கீத படைப்பு - 5** **பாடகர் குழு**
Carol Rendition Choir

**இம்மானுவேல் பிறந்தார்**

**இம்மானுவேல் பிறந்தார்**
**சிம்மாசனம் துறந்தார்**
**பெத்தலை என்னும் சிற்றூரின்**
**சத்திரத்தில் உதித்தார்**

1. காரிருளில் நடந்த ஜனங்களும்
பேரொளியினைக் கண்டனரே
அறுப்பில் மகிழ்ந்து கழிக்கும் மாந்தர் போல்
பெரு மகிழ்ச்சி அடைந்தார் கலிலேயர்கள் - இம்மானுவேல்

2. நமக்கென்று ஓர் பாலகன் பிறந்தாரே
எமக்கோர் சுதன் கொடுக்கப்பட்டார்
கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்
நித்தமும் பெருகும் அதின் சமாதானமும் - இம்மானுவேல்

3. அவர் நாமம் அதிசயமானவர்
அவர் ஆலோசனை கர்த்தா
அவர் வல்லமையுள்ள தேவனாம்
அவர் நித்திய பிதா சமாதான பிரபுவாம் – இம்மானுவேல்

**கிறிஸ்துமஸ் கீத படைப்பு - 6** **பாடகர் குழு**
Carol Rendition Choir

**மேசியா இயேசு ராஜன்**

**மேசியா இயேசு ராஜன்**
**மானிடன் ஆனாரே**
**சின்னஞ்சிறு பாலனாய்**
**கன்னிமரி மகவாய்**
**மாட்டுத் தொழுவினிலே**

**மனமே மனமே பாடிடு**
**மகிபன் இயேசுவை போற்றிடு**
**மாறாத அவரன்பை கொண்டாடிடு (2) - மேசியா இயேசு ராஜன்**

கைகள் தாளம் போடட்டும்
நாவில் இனிமை பொங்கட்டும்
உள்ளம் பூரிப்பாகட்டும்
கள்ளமில்லாமல் பாடட்டும்
இரட்சிப்பின் சத்தம் கேட்கட்டும்
ஹேப்பி ஹேப்பி கிறிஸ்மஸ் - மேசியா இயேசு ராஜன்

பாவங்கள் உலகில் மறையட்டும்
பரிசுத்தம் என்றும் நிலைக்கட்டும்
பாசமே பாரில் பெருகட்டும்
பாடுள்ள மனிதன் சிரிக்கட்டும்
பாரெல்லாம் புதுமையாகட்டும்
ஹேப்பி ஹேப்பி கிறிஸ்மஸ் - **மேசியா இயேசு ராஜன்**

✝ **திருமறைப் பாடம் – 3** **திரு. சாம் ஜோசப் சுரேஷ்**
Scripture Reading - 3 Mr. Sam Joseph Suresh

**லூக்கா 2 : 11 – 14**
Luke 2 : 11 - 14

**அருளுரை** **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணக்கீதம்** **சபையார் இணைந்து**
Offertory & Closing Song Congregation

**இயேசு மானிடனாய்ப் பிறந்தார்**

**இயேசு மானிடனாய்ப் பிறந்தார்**
**இந்த லோகத்தை மீட்டிடவே**
**இறைவன் ஒளியாய் இருளில் உதித்தார்**
**இந்த நற்செய்தி சாற்றிடுவோம்.**

1. மேய்ப்பர்கள் இராவினிலே - தங்கள்
மந்தையைக் காத்திருக்க
தூதர்கள் வானத்திலே - தோன்றி
தேவனைத் துதித்தனரே - **இயேசு**

2. ஆலோசனை கர்த்தரே - இவர்
அற்புதமானவரே
விண் சமாதானப்பிரபு - சர்வ
வல்லவர் பிறந்தனரே - **இயேசு**

3. மாட்டுத்தொழுவமதில் - பரன்
முன்னணையில் பிறந்தார்
தாழ்மையைப் பின்பற்றுவோம் - அவர்
ஏழ்மையின் பாதையிலே - **இயேசு**

4. பொன், பொருள், தூபவர்க்கம் வெள்ளைப்
போளமும் காணிக்கையே
சாட்சியாய் கொண்டு சென்றே-வான
சாஸ்தரிகள் பணிந்தனரே - **இயேசு**

*5. அன்னாளும் ஆலயத்தில் - அன்று*
*ஆண்டவரை அறிந்தே*
*தீர்க்க தரிசனமே - கூறி*
*தூயனைப் புகழ்ந்தனளே* - **இயேசு**

*6. யாக்கோபில் ஓர் நட்சத்திரம் -இவர்*
*வாக்கு மாறதவரே*
*கண்ணிமை நேரத்திலே-நம்மை*
*விண்ணதில் சேர்த்திடுவார்* - **இயேசு**

**கிறிஸ்துமஸ் கீத படைப்பு** - *7* — **பாடகர் குழு**
Carol Rendition — Choir

**<u>Loved before the dawn</u>**

Loved before the dawn of time
Chosen by my maker, hidden in my Saviour
I am His and He is mine
Cherished for eternity

When I'm stained with guilt and sin
He is there to lift me, heal me and forgive me
Gives me strength to stand again
Stronger than I was before

**So with every breath that I am given**
**I will sing salvation's song**
**And I'll join the chorus of creation**
**Giving praise to Christ alone**

All the claims of Satan's curse
Lifted through His offering, satisfied through suffering
All the blessings He deserves
Poured on my unworthy soul - So with every

Singing glory, honour, wisdom, power
To the Lamb upon the throne
Hallelujah, I will lift Him high

Singing glory, honour, wisdom, power
To the Lamb upon the throne (yeah)
Hallelujah, I will sing

With every breath that I am given
I will sing salvation's song
And I'll join the chorus of creation
Giving praise to Christ alone

Stars will fade and mountains fall
Christ will shine forever, love's unfading splendour
Earth and Heaven will bow in awe
Joining in salvation's song

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனம்***
Memory Verse

***எபேசியர் 5 : 27***
Ephesians 5 : 27

***27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Benediction Song — Congregation

***<u>அதி மங்கல காரணனே</u>***

***அதி மங்கல காரணனே, துதி தங்கிய பூரணனே,-நரர்***
***வாழ விண் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த வண்மையே தாரணனே!***

*1. மதி மங்கின எங்களுக்கும், திதி சிங்கினர் தங்களுக்கும் - உனின்*
*மாட்சியும் திவ்விய காட்சியும் தோன்றிட வையாய் துங்கவனே!*

*2. தீய பேய்த்திரள் ஓடுதற்கு, உம்பர் வாய்த்திரள் பாடுதற்கும்*
*உனைப்*
*பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்தற்கும் பெற்ற நல் கோலம்*
*இதோ?*

***We wish you a merry Christmas (3)***
***And a happy New Year***
***Glad tidings we bring, to you and your kin***
***Glad tidings for Christmas and a happy New Year***
***We wish you a merry Christmas (3)***
***And a happy New Year***